**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**

**Present: Thiru.A. Mohammed Sadiq Hussain., B.A., B.L., (Hons).,L.L.M., P.G.D.I.P.,**

**Dated:13.02.2023**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

**S.T.C. No.94/2022**

**Witness- P.W-2**

| | |
|---|---|
| Name | : ஜே சுராஜ் |
| Father 's Name: | : ஜான்கோவில்பிள்ளை |
| Address | : இணை கிளை மேலாளர், ICICI Bank. Tirunelveli |
| Age | : **29** |

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969**)

(1969 ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம், அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36 ன்படி இந்நீதிமன்றத்தின் Magistrate Clerk திருமதி.ராமலட்சுமி அவர்களால் சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

**<u>புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை</u>:**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது ICICI Bank. Tirunelveli கிளையில் ,இணை கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் வங்கியின் கிளை மேலாளரால் எனக்கு வழங்கப்பட்ட 13.02.2023 தேதியிட்ட அதிகார கடிதம் **பு.சா.ஆ.6** ஆகும். எங்கள் வங்கியில் எதிரி வங்கி கணக்கு எண் 613501527502 என்ற கணக்கினை பராமரித்து வருகிறார். அந்த வங்கி கணக்கிற்கான வரவு செலவுவிபரம் 01.04.2022 – 31.12.2022 வரையிலான காலகட்டத்தில் எதிரியின் வங்கி கணக்கில் பணபரிவர்த்தனை இல்லை மற்றும் வங்கிகணக்கானது 12.07.2022 அன்று முடிக்கப்பட்டுவிட்டது என்றும் மற்றும் காசோலை எண் 527502 என்பது இந்த வங்கி கணக்கிற்கு வழங்கப்படவில்லை என்ற 13.02.2023 தேதியிட்ட கடிதம் **பு.சா.ஆ.7** ஆகும். பு.சா.ஆ.1 காசோலையில் 613501527502 என்று குறிப்பிட்டுள்ளது அவர்எங்கள் வங்கியில் பராமரித்து வரும் வங்கி கணக்காகும். பு.சா.ஆ.1 காசோலை எண் 000024 ஆகும். 627229002 என்ற எண்ணானது MICR எண் ஆகும். 527502 என்ற எண்ணானது வங்கி கணக்கு எண் முடிவடையும் எண்கள் ஆகும். 31 என்பது Clearance

எண் ஆகும். எங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டஅழைப்பாணையில் 527502 என்ற வங்கி கணக்கு முடிவுடையும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு காசோலையானது 527502 என்று முடிவடையும் வங்கி கணக்கிற்கு குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது . 000024 எதிரிக்கு உண்டான காசோலைஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புசாஆ.1 காசோலையின் பின்புறம் Beneficiary Name மற்றும் கணக்கு எண் மற்றும் depositor Mobile No. நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அதனை நிரப்பிதான் வசூலு்க்காக தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் கட்டாயமாக அதனை நிரப்ப அவசியம் இல்லை. வங்கியில் நிரப்பப்படும் செல்லானில் மேற்கூறிய விபரங்களை நிரப்பினால் போதுமானதாகும் . காசோலை வசூலுக்காக தாக்கல் செய்யப்படும்போது பின்புறம் கையொப்பம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. தவறவிட்ட காசோலையை எடுத்து நிரப்பி வசூலு்க்காக தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. எதிரி எங்கள் வங்கிக்கு அவருக்கு சொந்தமான காசோலை தொலைந்து போய் விட்டதாகவும் அவருக்குவேண்டாதவர்கள் தவறாகபயன்படுத்த வாய்ப்பு உள்ளதாகவும் அவ்வாறு மோசடியாக பயன்படுத்தப்படும் பட்சத்தில் தனக்கு தகவல் தெரிவிக்குமாறும் அவ்வாறு யாராவது மோசடியாக தனக்கு சொந்தமான காசோலையை பயன்படுத்தியுள்ளார்களா என்று 20.07.2022 அன்று பதிவு தபால்வழியாக கடிதம் அனுப்பி அது எங்கள் வங்கியால் 21.07.2022 அன்று ஒப்புகைஅட்டையில் எங்கள் வங்கியில் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் உள்ளது என்றால் சரிதான். அது **எ.சா.ஆ. 4** வரிசைகள் ஆகும்.

<u>மறு விசாரணை இல்லை.</u>

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti